மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நீதிமன்றங்களில் சொத்து ஜாமீனுக்குப் பதில் நபர் ஜாமீன் முறையை அமலாக்குதல்.

292—(*வினா எண். 9118) **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதிமன்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களை ஜாமீனில் எடுக்கிறபோது சொத்து ஜாமீன் கோரப்படுவதற்குப் பதிலாக நபர் ஜாமீன் முறையை அமலாக்குகின்ற முறையில் சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனை நினை என்று கற்றுத் தந்த தந்தை பெரியார் அவர்களின் வழித்தோன்றல் ஆட்சியில் இருக்கிற இந்த நேரத்தில் மனிதர்களை மதிக்காமல் சொத்துக்களை மதிக்கிற நடைமுறையை மாற்றுகிற வகையில், சொத்து ஜாமீன் பெறுவதற்குப் பதிலாக நபர் ஜாமீனே போதும் என்ற நடைமுறையைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 73-வது திருத்தப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டத்தினுடைய 436 (1), 437 (1), 440 (1), 441 (1) என்ற பிரிவுகளின்படி சொத்து ஜாமீன் என்பது நீதி பரிபாலனத்தினுடைய நன்மை கருதி இருக்கவேண்டும் என்று முடிவு செய்து அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை நீக்குவோமானால் குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு நிலுவைகள் அதிகமாகும் என்ற உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தை ஒட்டி 1973-ல் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அது தொடர்ந்து இருந்து வருகிறது.

1987 ஏப்ரல் 4]

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு ஒரு அடி நிலம்கூட சொத்தாக இல்லாத இந்த நிலையில் ஒரு சாதாரண வழக்கில் யாரையாவது பிடித்துக்கொண்டு சென்றால் அந்த வழக்கு முடிகின்ற வரையில் அவர்கள் சிறைச்சாலையில்தான் அடைக்கப்பட்டு கிடக்கவேண்டுமா, அதைத்தவிர வேறு வழியே இல்லையா? எனவே சொத்தே இல்லாத நிலை நிலவுகிறபோது அசைகிற மனிதனைக் காட்டிலும், அசையாத சொத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது முற்றிலும் பொருத்தமற்றது என்பதை அரசு உணர்ந்து இனிமேலாவது இந்த நடைமுறையை மாற்றுவதற்குரிய வகையில் பொருத்தமான முறையை, மனிதாபிமான அடிப்படையிலான முறையைக் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குற்றவாளிகளைப் பொறுத்தது; குற்றத்தின் தன்மையைப் பொறுத்தது. தமிழக அரசு மட்டும் இதில் ஒன்றும் செய்ய முடியாது. அகில இந்திய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்று இது. இதுகுறித்து அரசு ஆயும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு பரோலில் லீவு கொடுக்கின்றபோது எந்தவிதமான ஜாமீனும் இல்லாமல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது ஜாமீன் கொடுக்க வேண்டியுள்ளது. அத்துடன் எஸ்கார்ட்களுக்கும் 2,000 ரூபாய் கட்ட வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் சுலபமாக ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு பரோலில் லீவு கொடுக்கிறார்கள். ஏழை எளிய ஆயுள்தண்டனைக் கைதிகளால் எப்படி இவ்வளவு ரூபாயைக் கட்ட முடியும்? அதை உணர்ந்து அரசு தாராளமாக லீவு கொடுக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தாராளமாக ஆயுள் கைதிகளுக்கு பரோலில் விடுதலை தரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கடந்த சில ஆண்டுகளில் அவ்வாறு கொடுக்கப்பட்டது. ஆனால் துரதிருஷ்ட-

வசமாக அப்படி பரோலில் தாராளமாக வெளியே சென்றவர்களால் 165 பேர் தலைமறைவாகிவிட்டார்கள். இதுவரையில் அவர்கள் சிறைச்சாலைக்கு வரவில்லை. மேலும் வெளியே சென்றவர்கள் பல கொலைகளையும் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாகத் தான் தற்போது நடவடிக்கை சற்று கடுமையாக்கப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 10-40)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றத்தின் அடிப்படையில் அந்த ஜாமீன்களுக்கு சொத்து ஜாமீன் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரண வழக்குகளுக்கு, செக்ஷன் 75 என்று சொல்லக்கூடிய சண்டை கேஸ்களுக்குக்கூட இந்த சொத்து ஜாமீன் கேட்கிறார்கள். இதுபோன்ற சிறு சிறு வழக்குகளுக்கெல்லாம் இந்த சொத்து ஜாமீன் அளிக்கப்படுவது நிவர்த்திக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்ன பதில்தான். இதுபற்றி அகில இந்திய அளவிலே ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். மைய அரசு அப்படி ஒரு முடிவு எடுக்குமானால் அனைத்து மாநிலங்களிலும் சரியாக அதை அமல் நடத்த முடியும். அதற்குத்தான் அரசு ஆயும் என்று ஏற்கனவே சொன்னேன்.

கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பாடம்.

293—(* வினா எண் 9774) திரு. மு. தங்கமணி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பற்றிய பாடம் கட்டாயமாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பற்றிய பாடம் கட்டாயமாக்குதல் குறித்து தற்போது கருத்துரு இல்லை. ஆனால் அதை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எந்த அளவுக்கு நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று ஆய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.